இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 13-10-2025

# ஒடுக்கப்பட்டோர் அரசியல் தெரியுமா? புரியுமா?

தற்குறி பழனிசாமி வாயைத் திறந்தால் உளறுவார் என்பதை தமிழ்நாடு அறியும். அந்த உளறலை ஊர் அறிய வைப்பதற்காகத் தான் ஊர் ஊராக 'சுந்தரா டிராவல்ஸ்' எடுத்துச் சுற்றிக் கொண்டிருக்கிறார் பழனிசாமி. அவரது சமீபத்திய உளறல்களில் ஒன்று...

"இன்று கூட செய்திகளில் பார்த்தேன், இனிமேல் மருத்துவமனையில் 'பயனாளிகள்' என்று சொல்ல வேண்டுமாம். நோயாளி என்று சொல்லக்கூடாதாம். பெயர் வைக்கிறதுக்கு ஒரு விவஸ்தை வேண்டாமா? ஸ்டாலின் அவர்களே, இரண்டு பெயரை மட்டும் தயவு செய்து மாற்றி விடாதீர்கள்.

அப்பா, அம்மா பெயரை மாற்றி விடாதீர்கள். விட்டால் அதையும் மாற்றிவிடுவார். எல்லாவற்றுக்கும் பெயர் மாற்றம், இரண்டாவது பெயர் வைப்பார். இப்படிப் பட்ட முதல்வரை எங்கும் பார்க்க முடியாது" என்று சொல்லி இருக்கிறார் தற்குறி பழனிசாமி.

**மருத்துவமனைக்கு வருபவர்களை 'நோயாளிகள்' என்று சொல்லக் கூடாது, 'பயனாளிகள்' என்று சொல்ல வேண்டும் என்ற உத்தரவுக்குப் பின்னால் ஒரு பண்பாடு இருக்கிறது. இதெல்லாம் பண்பற்ற பழனிசாமிக்குப் புரியாது.**

திராவிடர் கழகத் தலைவர் மானமிகு ஆசிரியர் அவர்கள் இது தொடர்பாக அறிக்கை வெளியிட்டார்கள். அதனை ஏற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதனை அறிவித்தார்கள். இதில் சொல்லாராச்சியாளர் பழனிசாமி என்ன குறை கண்டார்?

சமூக வலைத்தளத்தில் மருத்துவர் ஒருவர் எழுதி இருக்கிறார்... இதனை பழனிச்சாமிக்கு அறிவுப்புரிதல் இருந்தால் வாசிக்க வேண்டும்.

"மதுரையில் உள்ள 'தோப்பூர் ஆஸ்டின் பட்டி அரசு நெஞ்சக மருத்துவமனை', ஒரு காலத்தில் வேலிக்காத்தான் முள்காடுகள் சூழ்ந்த, மிகக் கொடூரமான, அச்சமூட்டுகிற வளாகமாக இருந்தது. பல ஆண்டுகளாக நீடித்த அந்த மருத்துவமனையின் இத்தகைய அவலநிலைக்கு, மதுரை உயர்நீதிமன்ற அமர்வில் ஒரு வழக்கு தொடுத்து முடிவு கட்டினார், 'சம உரிமை அமைப்பு' என்கிற சமூக நல அமைப்பின் நிறுவனத் தலைவரும், தீவிரமான சமூகநலச் செயற் பாட்டாளருமான எனதன்பு இளவல் திரு. ஆனந்தராஜ் அவர்கள்.

அவர் தொடுத்த வழக்கிற்குப் பிறகு, மருத்துவர் காந்திமதிநாதன் என்கிற உன்னதமானவொரு மகத்தான, 'மருத்துவ மானுடன்' அந்த மருத்துவமனையின் புதிய நிர்வாகியாகப் பணியேற்றார். அவர் மருத்துவமனையையே மாற்றி அமைத்தார். இந்த நிலையில், அந்த மருத்துவமனையின் செயல்பாடுகளை அறிந்துகொள்ளுமாறு ஒரு சிறப்பு அழைப்பாளராக என்னை அங்கு அழைத்துக் கொண்டு போனார், அன்புத்தம்பி ஆனந்தராஜ். அப்போது நெகிழ்ந்த மனநிலையில் நான் உரையாற்றினேன்.

**'நீங்கள் நோயாளிகள் அல்ல... இந்த அற்புதமான மருத்துவ மனையின் பயனாளர்கள். இந்த மருத்துவமனை, யார் யாருக்கு எப்படி எப்படிப் பயன்பட வேண்டுமோ அப்படியெல்லாம் பயன்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த மருத்துவமனையால் யார் யாரெல்லாம் எப்படியெப்படிப் பயன்பெற வேண்டுமோ அப்படியெல்லாம் பயன்பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். எனவே உங்களில் ஒருவர்கூட நோயாளிகள் அல்ல, இந்த மருத்துவமனையின் பயனாளர்கள்' என்கிற செய்தியையே என்னுடைய செய்தியாக முன் வைத்து நான் எனது உரையை நிறைவு செய்தேன்.**

அடுத்ததாக நன்றி சொல்ல முன்வந்த மருத்துவர் காந்திமதிநாதன் அவர்கள்,

'இனி இந்த மருத்துமனையில், 'நோயாளிகள்' என்று எவரும் கிடையாது. இங்கே சிகிச்சை பெறுகிற அனைவரும் இதன் பயனாளர்கள்தான். இனிமேல் இந்த மருத்துவ மனையில், நோயாளிகள் என்று குறிப்பிடாமல், 'பயனாளர்கள்' என்கிற சொல்தான் பயன்படுத்தப்படும்' என்று 'பயனாளர்களின்' வலுத்த கரவொலிக்கிடையே அறிவித்தார் மருத்துவர் காந்திமதிநாதன்.

அன்றுமுதல் இன்றுவரை கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக, மருத்துவப் பயனாளர்கள்' என்கிற சொல்லையே தனது நடைமுறைகளில் பயன்படுத்தி வருகிறது அந்த மருத்துவமனை!

**தற்போது அச்சொல்லுக்கு, அதிகாரப் பூர்வமாக ஏற்பிசைவு அளித்து, 'தமிழ்நாடு முழுவதும் உள்ள மருத்துவ மனைகளில், 'மருத்துவப் பயனாளர்' என்கிற சொல்லையே பயன்படுத்த வேண்டும்!' என்று அரசாணை வெளியிட்டிருக்கிறார், மாண்புமிகு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அதன் பொருட்டு அவருக்கு உளம் நிறைந்து நன்றி கூறுகிறேன்.**

'காசு வைத்துக்கொண்டு அதை ஆளுகிறவர்கள் காசாளர்கள். எழுத்துகளை ஆளுகிறவர்கள் எழுத்தாளர்கள். ஆனால் நோயுற்றவர்களை, 'நோயர்கள்' எனலாமே தவிர அவர்களை நோயாளிகள் என்பது தவறு! அவர்கள் நோய்களை வைத்துக் கொண்டு ஆளுகிறார்களா என்ன? என்பார், பெரும்புலவர் ஐயா கி.த.பச்சையப்பன் அவர்கள்" என்று எழுதி இருக்கிறார் அந்த மருத்துவர்.

**ஒரு சொல் மாற்றமானது அந்த சமூகத்தையே பண்படுத்துகிறது. அழுக்கை துடைக்கிறது. அவமானத்தை அகற்றுகிறது. இதெல்லாம் பழனிசாமிக்குத் தெரியுமா? 'கம்பராமாயணத்தை எழுதியவர் சேக்கிழார்' என்ற புத்திசாலி அவர். அவரிடமிருந்து வேறு எதனை எதிர்பார்க்க முடியும்?**

பெயரை மாற்றுவது சாதனையா என்று கேட்கிறார் பழனிசாமி. பெயரை மாற்றுவதுதான் சாதனை. பெயரில் என்ன இருக்கிறது என்று நினைக்கிறார் பழனிசாமி. பெயரில் தான் எல்லாம் இருக்கிறது.

மகள் நீலாம்பிகை படித்த பாட்டில், ஒரு சமஸ்கிருதச் சொல் இருந்ததால் மறைமலையடிகள் தனித்தமிழ் இயக்கம் உருவாக்கிய மண் இது. சமஸ்கிருத, இந்தி ஆதிக்கத்துக்கு எதிராக திராவிட இயக்கம் 100 ஆண்டுகளாக போராடி வரும் மண் இது. அக்கிராசனாதியை அவைத்தலைவர் ஆக்கியவர்கள் நாம். இப்போது அபேட்சகர்கள் இல்லை, வேட்பாளர்கள் தான் இருக்கிறார்கள். கான்பரன்ஸ் நடக்கவில்லை, மாநாடு தான் நடக்கிறது. விவாகம், திருமணம் ஆனது. இவை அனைத்தும் தமிழின் 100 ஆண்டு வரலாறுகள் ஆகும். இதையெல்லாம் பழனிசாமி அறிவாரா?

**மாற்றுத் திறனாளிகள் உடலால் மட்டுமல்லாமல் உள்ளத்தாலும் வருந்தி வாழ்ந்தார்கள். அவர்களை ஊனமுற்றோர் என்பதில் இருந்து மாற்றி மாற்றுத் திறனாளிகள் என அழைக்க வைத்தார் கலைஞர். இந்த சொல் மாற்றத்துக்குள் அந்த தோழர்களுக்கு கிடைத்த சுகத்தை பழனிசாமி அறிவாரா?**

**அதே போல் திருநங்கைகளும், திருநம்பிகளும் அடைந்து வந்த மனத்துன்பம் ஏராளம். அதனையும் கலைஞரின் சொல்தான் மனதாரக் காத்து வருகிறது. இதனை பழனிசாமி அறிவாரா?**

**சாதி அடையாளம் கொண்ட விடுதிகளை சமூகநீதி என்று விடுதிப் பெயர்கள் வைத்ததை பழனிசாமியால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை போலும். பட்டியலின சமூகத்தைச் சேர்ந்தவர் தனது வீட்டு வாசலில் சைக்கிளில் சென்றார் என்பதற்காக கட்டி வைத்து அடித்த கதையை தமிழ்நாட்டு மக்கள் அறிவார்கள். அருந்ததியர் இனச் சகோதரர்களை வீட்டுக்குள் அனுமதிக்காமல் கார் பார்க்கிங்கில் உட்கார வைத்து சால்வை வாங்கிய மேட்டிமைத்தனத்தையும் தான் நாம் பார்த்தோம்.**

**இது போன்ற நிலப்பிரபுத்துவக் குணங்கள்தான் இது போன்ற குற்றச்சாட்டுகளைச் சொல்ல வைக்கிறது.**

## உள்ளாட்சிப் பொறுப்புகளில் 50 சதவிகிதம்

# பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்கி பெரும் புரட்சி செய்தவர் முதல்வர்!

## திருவண்ணாமலை மாவட்ட கிராம சபைக் கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

**திருவண்ணாமலை, அக்.13-**

**"உள்ளாட்சிப் பொறுப்புகளில் 50 சதவிகிதம் பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கி பெரும் புரட்சி செய்தவர் நம் முதல்வர் அவர்கள்" என்று திருவண்ணாமலை மாவட்டத்தில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு பேசும்போது கூறினார்.**

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (11.10.2025) திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட அழகானந்தல் ஊராட்சியில் கிராம சபைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஊராட்சி மன்ற நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையையும், பொறுப்புணர்வை ஊக்குவித்தல், வளர்ச்சித் திட்டங்களை திட்டமிடுதல், செயல்படுத்தப்படுதல் மற்றும் பயனாளிகளின் விருப்பத்தின்படி பொதுமக்களின் பங்களிப்பை மேம்படுத்துதல் மற்றும் சமூக தணிக்கைக்கு வழி வகுத்தலே கிராம சபைக் கூட்டதின் முக்கிய நோக்கமாகும். அதன்படி அழகானந்தல் ஊராட்சில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் ஊராட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் குறித்தும் செலவிடப்பட்ட செலவீணங்கள் குறித்தும் பொதுமக்கள் முன்னிலையில் எடுத்துரைக்கப் பட்டது.

இக்கூட்டத்தில் பொதுப்பணிகள் நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்து கொண்டு சிறப்புரையாற்றியதாவது:

திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட அழகானந்தல் ஊராட்சியில் கிராம சபைக் கூட்டம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. கிராமங்கள் நிறைந்தது தான் இந்தியா.

அதிலும் தமிழ்நாடு முழுக்க முழுக்க கிராமங்களினால் உருவானவை. மகாத்மா காந்தியடிகள் கூறியது போல கிராம ராஜியம் வேண்டும் என்றும் ஒவ்வொரு கிராமமும் தன்னாட்சி பெற்ற, சுயசார்பு குடியரசாக இருக்க வேண்டும் என்பதே காந்தியடிகளின் கனவாகும்.

பேரறிஞர் அண்ணா அவர்களும் 'மக்களுடன் செல், மக்களோடு பழகு, அவர்களின் தேவைகளை பூர்த்தி செய் அதுதான் கிராம ராஜியத்தின் உட்பொருள்' என்று கூறினார்கள். மேலும் கலைஞர் அவர்கள் உத்தமர் காந்தியடிகள், தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணா அவர்களின் கனவை நிறைவேற்றுவது தான் என் ஆட்சியினுடைய கடமை என்று மக்களுக்கு தேவையான பல்வேறு திட்டங்களை நிறைவேற்றினார்.

**மக்களின் இன்னல்களைப் போக்கிய கலைஞர்!**

கலைஞர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பின் சுகாதாரமற்ற தண்ணீரால் நோய்கள் வருவதை அறிந்து குடிநீர் வடிகால் வாரியத்தை செயல்படுத்தினார். பின் தமிழ்நாடு முழுவதும் சுகாதார மான பாதுகாப்பான குடிநீர் தொட்டிகளை உருவாக்கி மக்களின் ஆரோக்கியத்தை பேணி காத்த பெருமை கலைஞர் அவர்களையே



சாரும். மேலும் உழவன் சேற்றில் இறங்கினால் தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும் என்ற வாசகத்திற்கு இனங்க உழவர் பெருமக்கள் விவசாய உற்பத்திக்கு உதவிட கலைஞர் அவர்கள் விவசாயிகள் உபயோகப்படுத்தும் பம்புசெட்டுகளுக்கும் உபகரணங்களுக்கும் விலையில்லா மின்சாரம் என்ற திட்டத்தினை கொண்டு வந்து அவர்களின் வாழ்க்கையை மேம் படுத்தினார்.

அந்த காலங்களில் கிராமப் புறங்களில் பொதுமக்களுக்கு மருத்துவ மனை மற்றும் மருத்துவ வசதிகள் இல்லாமல் பெரும் அவதிக்கு உள்ளானர்கள், மருத்துவ தேவைக்காக வெளியூர் சென்று வந்த நிலைமையை மாற்றி தற்போழுது திருவண்ணா மலையில் அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களை கொண்டு வந்து மக்களின் இன்னல்களை நீக்கினார். தற்போழுது முதலமைச்சர் அவர்கள் உத்தமர் காந்தி, பேரறிஞர் அண்ணா மற்றும் கலைஞர் அவர்களின் வழியில் கிராமங்களுக்கு தேவையான அனைத்து திட்டங்களை நிறை வேற்றினார்.

**பெரும் புரட்சி செய்த நம் முதல்வர்!**

மேலும் இன்றைய தினம் முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் நடைபெறும் கிராம சபைக் கூட்டகங்ளில் காணொளி காட்சியின் மூலமாக கலந்து கொண்டு கிராமங்களின் முக்கியத்துவம் குறித்து உரையாற்றினார்கள். பெண்களின் வாழ்வு மேம்பட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உள்ளாட்சி பொறுப்புகளில் 33 % இடஒதுக்கீடு வழங்கினார். தற்போழுது முதலமைச்சர் அவர்கள் உள்ளாட்சி பொறுப்பில் பெண்களுக்கு 50% இடஒதுக்கீடு வழங்கி பெண்களுக்காக பல்வேறு திட்டங்களை கொண்டு வந்து பெரும் புரட்சி செய்துள்ளார்.

**வருடத்திற்கு 6 முறை கிராம சபைக் கூட்டங்கள்!**

மேலும் கிராமங்களை முன்னேற்ற வேண்டும் என்றும் கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த கிராம சபைக் கூட்டமானது ஜனவரி 26 (குடியரசு தினம்), மே 1 (உழைப்பாளர் தினம்), ஆகஸ்ட் 15 (சுதந்திர தினம்), அக்டோபர் 2 (காந்தி ஜெயந்தி) என வருடத்திற்கு 4 முறை நடைபெற்றது, தற்போழுது முதலமைச்சர் அவர்கள் 2 மாதத்திற்கு 1 முறை வீதம் ( கூடுதலாக மார்ச் 22 மற்றும் நவம்பர் 1) வருடத்திற்கு 6 முறை நடத்தி கிராமப்புறங்களின் தேவைகள் எல்லாம் பூர்த்தி செய்ய வேண்டும் என்று நோக்கத்துடன் கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த கிராம சபைக் கூட்டத்தில் முக்கியமாக விவாதிக்க வேண்டியவைகள் ஊரகப்பகுதியில் ஏ.டி.ஸ். கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்த சுற்றுபுரத்தில் நீர் தேங்காமல் தூய்மையாக பராமரிக்க வேண்டும், அனைத்து கிராமங்களிலும் ஒட்டு மொத்த தூய்மை பணி, அரசு அலுவலகங்களிலும் தூய்மை, மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகளை மாதம் ஒரு முறை தூய்மை, அதே போன்று டயர், தேங்காய் மட்டை, பானைகள் போன்ற பொருட்களில் நீர் தேங்கி டெங்கு கொசு உருவாக காரணமாக அமைகிறது, அவைகளை தூய்மை பணியாளர்களுடன் பொதுமக்களும் செயல்பட்டு அப்புறப்படுத்தி சுகாதாரத்தையும் ஆரோக்கியத்தையும் காக்க வேண்டும்.

மேலும் அழகானந்தல் கிராமத்தில் 36 இலட்சம் மதிப்பீட்டில் பள்ளி உள்கட்டமைப்பு திட்ட பணிகளும், 38 இலட்சம் மதிப்பீட்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட பணிகளும், 53 இலட்சம் மதிப்பீட்டில் மகாத்மா காந்தி தேசிய வேலைவாய்ப்பு திட்ட பணிகளும், 17 இலட்சம் மதிப்பீட்டில் முதல்வர் கிராம சாலை மேம்பாட்டு திட்ட பணிகளும், 9 இலட்சம் மதிப்பீட்டில் கலைஞர் கனவு இல்லம் என மொத்தம் 80 பணிகளுக்கு 2 கோடியே 61 இலட்சம் மதிப்பீலான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**அருந்ததியர் காலனி 'பெரியார் நகர்' என பெயர் மாற்றம்!**

இன்று கிராம சபைக் கூட்டத்தில் முன்னேடுக்கும் முக்கிய தீர்மானங்களில் ஜாதி பெயர் கொண்ட சாலைகள் தெருக்களின் பெயரை மாற்ற தீர்மானம், கிராம ஊராட்சி நிர்வாகம் நிதி முறையாக செலவிடுதல், மழை நீர் சேகரிப்பு, டெங்கு தடுப்பு நடவடிக்கை, வடகிழக்கு பருவ மழைக்கான முன்னேச்சரிக்கை நடவடிக்கை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், தூய்மை பாரத இயக்கம் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப் படுகிறது.

ஜாதி பெயர்கள் கொண்ட தெருக்களின் பெயரை மாற்ற வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் சட்டசபை அறிவிப்பின் படி இன்றைய தினம் அழகானந்தல் ஊராட்சியில் உள்ள இரண்டு பகுதிகளின் பெயர்களை பொதுமக்களின் விருப்பத்தின் படி அருந்ததியர் காலனியை பெரியார் நகர் என்றும், ஆதிதிராவிடர் பகுதிக்கு டாக்டர் அம்பேத்கர் நகர் என்று அழைக்கப்படும்.

மேலும் கிராமப்புற பகுதிகளில் உள்ள மக்களை முன்னேற்ற பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வரும் முதலமைச்சர் அவர்களுக்கு அனைவரும் உறுதுணையாக இருக்கவேண்டும் என்று பொதுப்பணிகள் நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

**பொதுமக்கள் உறுதிமொழி ஏற்பு!**

அதனை தொடர்ந்து பொதுப்பணிகள் நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 'பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்' திட்டத்தின் கீழ் பாலின விகித மேம்பாட்டுக்கான கீழ்க்கண்ட உறுதி மொழியை பொதுமக்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

'நான் இந்த நாட்டின் ஒரு பொறுப்புள்ள குடிமகனாக, பாலின சமத்துவத்தை நிலைநிறுத்தவும். பெண் குழந்தைகளின் உரிமைகளை மதிக்கவும், பெண் சிசுக் கொலையை ஒழிப்பதற்கும், பாலினத் தேர்வு செய்வதைத் தடுப்பதற்கும். பெண் குழந்தைகளுக்கு சிறந்த கல்வி, பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியமான குழலை வழங்குவேன்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு உரிய மரியாதை அளிப்பேன், அவர்களின் உரிமைகளை சமமாக மதிப்பேன், பாலியல் துன்புறுத்தல் அல்லது எந்த வகையான பாலின வன்முறையிலும் ஈடுபட மாட்டேன், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக இருப்பேன். இது போன்ற செயல்களைச் செய்பவர்களுக்கு எதிராக புகார் அளிப்பேன். வரதட்சணை இல்லாத சமூகத்தை உருவாக்குவேன் பெண் சிசுக்கொலை மற்றும் கருக்கலைப்பு சம்பவங்களைத் தடுப்பேன் பாலின பாகுபாடு இல்காத சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் வலிமை உள்ள ஒரு வலுவான தமிழ்நாட்டை உருவாக்க கடுமையாக பாடுபடுவேன் பெண் குழந்தைகள் பிறந்ததைக் கொண்டாடி, அவர்களுக்கு ஆதரவான குடும்ப மற்றும் சமூக சூழலை உருவாக்குவதிலும் ஒவ்வொரு பெண் குழந்தையும் கல்வி கற்று, சமத்துவத்துடன் வாழவும், அனைத்து துறைகளிலும் பங்கேற்கவும் உதவுவேன், மேலும், "பென் குழந்தைகளை காப்போம். பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் என்பதை என் வாழ்நாள் இலக்காகக் கொண்டு செயல்படுவேன்' என்றும் உறுதியளிக்கிறேன்.

**நலத்திட்ட உதவிகள் வழங்கல்!**

மேலும் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 63 நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளி உதவித் தொகை, இந்திரா காந்தி கைம்பெண் உதவித்தொகை மற்றும் ஆதரவு அற்றோர் உதவித்தொகைகளும், வருவாய் துறை சார்பாக 3 நபர்களுக்கு பட்டா மாறுதல்கான ஆணைகளும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பாக இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு புதிய பத்திர ஆணைகளையும். மகளிர் திட்டம் சார்பாக சமூதாய முதலீட்டு நிதியாக 2 மகளிர் குழுக்களுக்கு தலா ரூ.1 இலட்சத்து 50 ஆயிரத்திற்கான ஆணையினையும் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.இராம்பிரதீபன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் இரா.மணி, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) தனபதி, திருவண்ணாமலை கோட்ட உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) வடிவேலன், மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி. மலர் விழி, திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் ராஜ்குமார், திருவண்ணாமலை வட்டாட்சியர், திருவண்ணாமலை வட்டார வளர்ச்சி அலுலர்கள் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க.

# மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், அணிகளின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் புத்தாடைகள் இனிப்பு வழங்கி சிறப்புரை!

*கன்னியாகுமரி, அக். 13 -*

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக நிர்வாகிகள், பேரூர், மாநகர, வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்ட மற்றும் நாகர்கோவில் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் ஆலோசனைக் கூட்டம் 11.10.2025 சனிக்கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது.

கூட்டத்தில் கழக வளர்ச்சி பணிகள் மற்றும் தேர்தல் பூத் பணிகள் தொடர்பாக கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கி ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை பணிகளில் ஈடுபட்ட கழக நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டு நிர்வாகிகள் அனைவருக்கும் புத்தாடைகள் மற்றும் இனிப்புகளை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் வழங்கினார்.

கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் எப்.எம். இராஜரெத்தினம், நாகர்கோவில் மாநகரச் செயலாளர் வழக்கறிஞர் ப. ஆனந்த், மாவட்ட துணைச் செயலாளர்கள் கரோலின் ஆலிவர்தாஸ், பூதலிங்கம் பிள்ளை, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சதாசிவன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் பா.பாபு, மோ.பிராங்கிளின், த.செல்வன், பி.சற்குரு கண்ணன், ஏ.சுரேந்திர குமார், ஒன்றிய கழகப் பொறுப்பாளர்கள் ச.சுந்தர்சிங், ஜெ.மிலன், நகர கழகச் செயலாளர்கள் குமரி ஸ்டீபன், பகுதி கழகச் செயலாளர்கள் இ.ஜவகர், த.ஜீவா, என்.பி.துரை, எம்.சேக்மீரான், மாநகர அவைத்தலைவர் பன்னீர் செல்வம் உட்பட பேரூர் செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் மாவட்ட மற்றும் நாகர் கோவில் மாநகர அமைப் பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக நிர்வாகிகள், பேரூர், மாநகர, வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்ட மற்றும் நாகர்கோவில் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை பணிகளில் ஈடுபட்ட கழக நிர்வாகிகளுக்கு புத்தாடைகள் மற்றும் இனிப்புகளை மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் வழங்கினார். இதில் எப்.எம்.இராஜரெத்தினம், வழக்கறிஞர் ப.ஆனந்த், கரோலின் ஆலிவர்தாஸ், பூதலிங்கம் பிள்ளை, சதாசிவன், பா.பாபு, மோ.பிராங்கிளின், த.செல்வன், பி.சற்குருகண்ணன், ஏ.சுரேந்திரகுமார், ச.சுந்தர்சிங், ஜெ.மிலன், குமரி ஸ்டீபன், இ.ஜவகர், த.ஜீவா, என்.பி.துரை, எம்.சேக்மீரான், பன்னீர் செல்வம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.